பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 12 | வியாழக்கிழமை | 25.04.2024 | அதிர்வு 268

## சஜித் - சம்பந்தனுக்கு தூது அனுப்பிய பஸில்

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தூது அனுப்பி நாடாளுமன்றத் தேர்தலை முதலில்

06







# மஹிந்த, கோட்டாவைப் போல் ரணிலும் தமிழர்களின் எதிரி!

## சஜித்தின் ஆட்சியில் அரசியல் தீர்வு உறுதி என்கிறார் கிரியெல்ல எம்.பி.

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்குஎதிராகவேவடக்கு,கிழக்குமற்றும் மலையகத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபயராஜபக்ஷஆகியோரைப்போல்ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களின் எதிரியாவார்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

06



## விஜயதாஸ, துஷ்மந்த ஆகியோர் சு.கவில் பதவிகளை வகிக்கத் தடை





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ர பால ஆகியோர் அந்தப் பதவிகளில் செயற்படுவதைத் தடுக்கும்

06



மீண்டும் ஒரு தடவை எது நடக்குமென்று ஆருடம் – ஊகம் – கூறினேனோ அதுவே நடந்து விட்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் நேற்று, இன்று, நாளை என்று மாறி மாறி திகதியிடப்பட்டு, இழுத்தடிக்கப்பட்டு, நடத்தப்பட முடியாமல் குழம்பி – அல்லது குழப்பி – போனமைக்கு என்ன காரணம், அதன் விளைவு யாது என்பவற்றை இரண்டொரு தினங்களுக்கு முன்னர் ஊகமாக இப்பத்தியில் கூறியிருந்தேன். அதுவே சரி என்பது நேற்று நீதிமன்ற நடவடிக்கையில் புலனாகி இருக்கின்றது.

கட்சியின் அரசியல் குழு மார்ச் 17ஆம் திகதி கூடி எடுத்த

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# ஈரானின் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் அமோக வரவேற்பு

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்திற்கு சென்றனர்.

ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

அதன்பின், ஈரான் ஜனாதிபதிக்கு முப்படையினால் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு மரியாதை அளிக்கப்பட்டது.






















# ‘உமா ஓயா’ அபிவிருத்தி திட்டம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

## இலங்கை - ஈரான் ஜனாதிபதிகளால் திறந்து வைப்பு

மகாவலி திட்டத்திற்கு அடுத்தபடியாக இலங்கையின் பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இடம்பெறும் “உமா திய ஜனனி” பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் நேற்று இலங்கை – ஈரான் ஜனாதிபதிகளினால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இருநாட்டு தலைவர்களும் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து “உமா தியா ஜனனி“ பல்நோக்கு அபிவி ருத்தித் திட்டத்தை மக்களிடம் கையளித்தனர். அத்துடன், டிஜிட்டல் தொழில்நுட்ப முறையின் ஊடாக மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்கி பணிகளை ஆரம்பித்து வைத் தனர்.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இந்தத் திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் மட்டுமல்ல, ஆசிய வலய நாடுகளுக்கு இடையேயான அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருமைப் பாடு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான அடையாள மாகும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையுடன் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல தயாரென ஈரான் ஜனாதிபதி உறுதியளித்தார். இலங்கை யின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில் நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங் கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயாரெனவும் அவர் தெரிவித்தார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் அவரது பாரியார் ஜெமீலே சதாத் அலமோல் ஹுதா உள்ளிட்ட குழுவினர் நேற்று காலை மத்தள விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

இதன்போது ஈரான் ஜனாதிபதி தலைமையிலான குழு வினருக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர் களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அழைப்பின் பேரில், ஈரான் ஜனாதிபதி ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜ யத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார். 2008 ஏப்ரல் மாதத்தில் அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நெஜாட்டின் இலங்கை விஜயத்திற்கு பின்னர், ஈரான் ஜனாதிபதியொருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தனது வருகையை குறிக்கும் வகையில் ஈரான் ஜனாதி பதி மத்தளை விமான நிலையத்தில் உள்ள விருந்தினர் குறிப்பேட்டிலும் பதிவிட்டார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் என்பது இலங் கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். தென்கிழக்கு பகுதியின் உலர் வலயத்தில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையைத் தனிப்பதற்காக, சுற்றுச் சூழலுக்கும், நீர் மூலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், உமா ஓயாவில் வருடாந்தம் சேரும் 145 கனமீற்றர் நீருக்கு மேலதிகமான நீரை கிரிந்தி ஓயவிற்கு திருப்பிவிடுவதே இத்திட்டத்தின் பிர தான நோக்கமாகும்.

இதன் மூலம் மொனராகலை மாவட்டத்தில் 4500 ஹெக்டயர் புதிய விவசாய நிலங்களுக்கும் தற்போதுள்ள 1500 ஹெக்டயர் விவசாய நிலங்களுக்கும் நீர்ப் பாசன வசதி கிடைக்கும். அத்தோடு பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை பிரதேசங்களின் குடிதண்ணீர் மற்றும் தொழிற்சாலை நீர்த் தேவைகளுக்கு 39 மில்லியன் கன மீற்றர் நீரையும் வழங்க முடியும். இதனால் வருடாந்தம் 290 ஜிகாவாட் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு வழங்க முடியும்.

இத்திட்டத்தில், புஹுல்பொல மற்றும் டயரபா உள்ளிட்ட இரு நீர்த்தேக்கங்களை இணைக்கும் 3.98 கிலோ மீற்றர் நீளமான நீர்ச் சுரங்கம் (இணைப்பு சுரங்கப் பாதை), 15.2 கிலோ மீற்றர் நீளமான பிரதான சுரங்கப்பாதை, நிலக்கீழ் மின் நிலையம், மின்சார கம்பிக் கட்டமைப்பு மற்றும் அதனு டன் தொடர்புடைய ஏனைய நிர்மாணங்களும் உள்ளடங்கி யுள்ளன.








# ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்து


ஊடகம் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கான ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்டன.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் 5 புதிய உடன்படிக்கைகள் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளன.

நாட்டிற்கு வருகை தந்த ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், ஜனாதிபதி அலுவலகத்தில் இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது, இலங்கை தேசிய நூலகம், ஈரான் தேசிய நூலகம் மற்றும் ஆவணக்காப்பகம் ஆகியவற்றுக்கு இடையில் ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் ஈரானின் கலாசார இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சுக்கு இடையே திரைப்படத்துறையின் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

# ஈரானுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி முன்னோக்கிச் செல்வதே எமது நோக்கமாகும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



“ஈரானின் ஆதரவின்றி இலங்கையால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவிற்கு நீரை கொண்டு சென்றிருக்க முடியாது. அதற்காக ஈரான் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறோம். ஈரானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்வதே எமது நோக்கமாகும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

“உமா ஓயா“ பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை நேற்று மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இன்று இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பை ஏற்ற ஈரான் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்தச் சந்தர்ப்பத்தை நான் கருதுகிறேன்.

இந்தத் திட்டம் எனது பதவிக் காலத்திற்கு முன்பிருந்த தலைவர்களால் தொடங்கப்பட்டது என்பதைக் கூற வேண்டும். அத்துடன் உலர் வலய பிரதேசத்திற்கு நீர் வழங்கும் இத்திட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அக்கறை காட்டினார். முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்த திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் எமது இரு நாடுகளுக்கும் சவால்களை எதிர்கொள்வதில் நல்ல அனுபவம் உள்ளது. எனவே, இந்த சவால்களையும் நாங்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டோம்.

மேலும், இந்த உமா ஓயா திட்டம் நமது இரு நாடுகளின் இரண்டு பழைமையான நீர்ப்பாசன மரபுகளின் கலவையாகும். ஈரானில் பெர்சியா மற்றும் இலங்கையில் அனுராதபுரத்தின் நீர்ப்பாசன பாரம்பரியம் இங்கே உள்ளது. ஈரானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு கிடைக்காமல் போயிருந்தால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவிற்கு நீரை எடுத்துச் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது என்பதைக் கூற வேண்டும்.

ஈரானின் தொழில்நுட்ப வல்லமை அனைத்து துறைகளிலும் பரவியுள்ளது. ஈரான் தனக்கே உரிய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பேணும் நாடு என்பதையும் கூற வேண்டும். எனவே, இரு நாடுகளின் பொதுவான அம்சங்களை நாம் வலுப்படுத்த வேண்டும். நாம் அனைவரும் உலகளாவிய தெற்கு நாடுகளில் அடங்குகிறோம். உலகளாவிய தெற்கு நாடுகள் தங்கள் அடையாளத்தையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இத்தகைய திட்டங்கள் மிகவும் முக்கியமானவை.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக, ஈரான் எமது நாட்டின் உலர் வலய பிரதேச மக்களுக்கு நீர் வழங்குவதற்கு பங்களித்துள்ளது. இது மக்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

உலர் வலய பகுதிக்கு நீர் வழங்குவது என்பது அந்தப் பகுதி மக்களுக்கு வாழும் உரிமையை வழங்குவதாகும். கிருவாபத்துவவிற்கு அப்பால், மாகம்பத்துவவில் உள்ள பகுதியில் வறட்சியால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அப்படியானால், இன்று நாம் செய்திருப்பது உடவளையில் கிடைக்கும் பல்நோக்கு முறைமையை கிரிந்திஓயாவுக்குக் கொண்டுவருவதுதான்.

அந்த நீர்ப்பாசன முறைமையுடன் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய முதலீட்டு வலயத்தை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளோம். அதற்காக சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு எரிபொருள் சுத்திகரிப்பு ஆலைக்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளோம். இதன் மூலம் ஹம்பாந்தோட்டை மாவட்டம் புதிய பொருளாதார முன்னேற்றத்தை பெறும்.

இந்தப் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக சிறு மற்றும் பெரும்போகங்களில் 6,000 ஹெக்டெயார் நிலப்பரப்பில் விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படும். உடவளவ பிரதேசம் இலங்கையில் அதிகளவு நெல்லை உற்பத்தி செய்கிறது. தற்போது அம்பாந்தோட்டை பிரதேசத்திலும் அதே செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

அதன் மூலம் தென் மாகாணத்திலும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியும். மேலும், இது வலுசக்தித் துறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கும்.

மேலும், இந்த திட்டத்தின் ஊடாக 120 மெகா வொர்ட் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். உலகின் தெற்கில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் என்ற வகையில் ஈரானும் இலங்கையும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. அதன்படி, ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறுவோம் என்று நான் உறுதியளிக்கிறேன் .” – என்றார்.

# வவுனியாப் பல்கலை பெண்களின் விடுதியில் உள்ளாடையுடன் நுழைந்த நபரால் பரபரப்பு

(கே.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் உள்ளாடையுடன் நபர் ஒருவர் நுழைந்தமையால் மாணவிகள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் இரவு 12.45 அளவில் இனம் தெரியாத நபர் ஒருவர் உள்ளாடையுடன் உள்நுழைந்துள்ளார்.

இதை அவதானித்த அங்கிருந்த முதல் வருட மாணவி ஒருவர் அச்சமடைந்த நிலையில் கூக்குரலிட்டுள்ளார்.

இதனையடுத்து அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவி தாயாருக்குத் தொலைபேசியூடாக இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதனால் ஏற்கனவே இருதய நோயினால் பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் இச்சம்பவத்தில் மனம் பதற்றமடைந்த நிலையில் மறுதினம் நோயினால் மரணமடைந்துள்ளதுள்ளார் என சக மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தால் மாணவிகள் விடுதியில் இருந்து முற்றாக வெளியேறியுள்ளமையுடன் விடுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி வகுப்புப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஏன் உள்ளனர் என்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பியுள்ளனர்.

இதேவேளை வவுனியா பூவரசன்குளம் பொலிஸில் இது தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய உள்ளாடையுடன் உள்நுழைந்த நபர் தொடர்பாக கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன் மோசடிகளில் ஈடுபட்ட 6 பேர் சிக்கினார்கள்

**(கே.வசந்தன்)**

வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன் 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கடவுச்சீட்டு காரியாலயம் முன் மோசடிகள் இடம்பெற்றால் முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்களுக்குப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக பல மோசடிகள் இடம்பெறுகின்றன என்றும், அதற்குப் பொலிஸாரும் உடந்தை எனத் தெரிவித்தும் கடந்த சில நாட்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனைத் தொடர்ந்து வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கமைய செயற்பட்ட தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக தலைமையிலான குழுவினர், நேற்று அதிகாலை வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக சோதனையில் ஈடுபட்டதுடன் மோசடிகளில் ஈடுபட்டு வருபவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் 6 பேரைக் கைது செய்தனர்.

இதேவேளை, வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக எதிர்வரும் நாட்களில் கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றால் தனது உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கமான 0718593520 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

# கம்பனிகளிடம் கையேந்தவில்லை: சம்பள உரிமையையே கேட்கிறோம்

## வடிவேல் சுரேஷ் எம்.பி. சீற்றத்துடன் தெரிவிப்பு



**(ராமு தனராஜ்)**

“பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாக சம்பள நிர்ணய சபை நேற்றைய தினம் கூடியது. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினுடைய அங்கத்தவர்களும் அதில் கலந்துகொண்டிருந்தனர். ஆனால், நேற்றைய தினமும் பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்பள நிர்ணய சபையின் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளன. மீண்டும் ஒருமுறை தோட்டத் தொழிலாளர்களையும் சம்பள நிர்ணய சபையையும் தோட்ட நிறுவனங்கள் புறக்கணித்துள்ளன.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தோட்ட நிர்வாகத்தைப் புறக்கணிக்க வேண்டும். ஏற்கனவே இரண்டு தடவைகள் கூடிய சம்பள நிர்ணய சபைக்கு முதலாளிமார் சம்மேளனம் வருகை தரவில்லை. மூன்றாம் முறையும் வருகை தராவிடின் நாட்டினுடைய தொழில் சட்டத்துக்கமைய சம்பள நிர்ணய சபையில் ஆகக் கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் எந்தத் தொகை நிர்ணயிக்கப்படுகின்றதோ அதனைப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனமாக உறுதி செய்து வர்த்தமானியில் வெளியிட தொழில் அமைச்சருக்கும் தொழில் ஆணையாளருக்கும் அதிகாரம் உள்ளது .

பெருந்தோட்ட நிர்வாகங்களிடம் நாம் கையேந்தவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியமே கேட்கின்றோம்.

எங்களுடைய பொறுமையைச் சோதிப்பதால் பெருந்தோட்ட நிறுவனங்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற ஒரு நாள் ஊதியத்தை வழங்குவதற்குப் பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்காவிட்டால் பெருந்தோட்ட நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்களைப் புறக்கணித்ததைப் போன்று தோட்டத் தொழிலாளர்கள் நடந்து கொண்டால் தோட்ட நிர்வாகங்களில் நிலைமை என்னவாகும்?

இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தினுடைய அடுத்தகட்ட நடவடிக்கை கலந்துரையாடலின் பின்னர் அறிவிக்கப்படும்.” – என்றார் வடிவேல் சுரேஷ் எம்.பி.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடிவின் – தீர்மானத்தின் – வழிகாட்டலின் – படியே வழக்கைத் தான் கொண்டு செல்கின்றார் என்று வழக்கின் ஆறாவது எதிராளியான சுமந்திரன் நீதிமன்றத்திலும், வெளியிலும் தெளிவாகக் கூறிவிட்டார்.

அரசியல் குழுக் கூட்டத்தில் தனி ஒருவனாக, சட்ட நிலைமைகளையும், தமது கருத்தியல் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தி, முழு அரசியல் குழுவையும் அதற்கு இணங்கப் பண்ணியிருந்தார் சுமந்திரன். அது மட்டுமல்ல, அந்த அரசியல் குழுவில் வழக்கின் அப்போதைய ஏழு எதிராளிகளில் அறுவர் இடம்பெற்றிருந்தனர். அவர்களையும் வைத்துத் தான் அந்த முடிவை சுமந்திரன் எடுக்கப் பண்ணியிருந்தார்.

மத்திய குழுவைக் கூட்டி இருந்தாலும், அப்படியே ஒரு முடிவை தமது வாத ஆளுமையால் சுமந்திரன் எடுக்கப் பண்ணியிருப்பார் என்பது எதிர்பார்க்கப்பட்டது. அப்படிக் கட்சியின் கொள்கைத் தீமானத்தை எடுக்கும் அதிகாரம் கொண்ட முக்கியகுழுவில்அத்தகையமுடிவுஎடுக்கப்பட்டால், அதற்குப் பிறகு நீதிமன்றுக்கு போய், வேறு மாறான – மாற்றான – நிலைப்பாடு எடுத்து, வழக்கைக் குழப்பியடிக்க முடியாதல்லவா? சுமந்திரன் வழியில் தானே அதன் பின் செல்ல வேண்டி இருக்கும்?

அந்த இக்கட்டு நேராமல் இருப்பதற்காகத்தான் அன்னை பூபதி நினைவு தினம், சித்ரா பௌர்ணமி என்ற காரணங்களை எல்லாம் கூறி, மத்திய குழுவுக்கு வரமாட்டோம் என்று பிகு பண்ணி, கூட்டத்தையே குழப்பியடித்தார்கள் என்று கோடிகாட்டி இருந்தேன். அதுவே நடந்துள்ளது.

ஜனாதிபதிசட்டத்தரணிகே.வி.தவராஜாவின் நேற்றைய வாதம் அதை உறுதிப்படுத்தியது.

“அரசியல் குழு காட்டிய வழிப்படி வழக்கை நடத்துகிறார் என சுமந்திரன் கூறுகிறார். ஆனால் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை தீர்மானிக்கும் அமைப்பு அரசியல் குழு அல்ல. மத்திய குழுவே. அது அப்படி ஒரு முடிவை எடுக்கவில்லை. அதனால் வழக்காளியின் எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்று, வழக்கை விரைந்து முடிக்க விரும்பும் தீர்மானத்தை நாம் எடுத்து, அந்த வழியில் விடயங்களை நகர்த்துகிறோம்.” – என்று சிறிதரன் மற்றும் குகதாசன் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி தவராஜா தெரிவித்தார்.

நான் ஆருடம் சொன்ன கருத்துத் தான் அது.

சரி, இனி வழக்குத் தவணைக்கு இன்னும் ஐந்து வாரங்கள் இருக்கின்றன. இந்தக் கால இடைவெளியில் மத்திய குழு கூடி, முடிவெடுத்து, வழிபடுத்தலாம் தானே என்று நீங்கள் கேட்கலாம்.

அப்படி வரும்போது, ‘ஏற்கனவே வழக்கில் எங்கள் தரப்பு ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்து விட்டோம். அதை இனி மாற்ற முடியாது’ என்று கூறித் தப்பிக் கொள்வார்கள்.

வழக்கு, நீதிமன்றம், விசாரணை என்று வந்த பின்னரும் கூட, கட்சியின் கொள்கை வகுப்புக் கட்டமைப்பான மத்திய குழுவைக் கூட்டி, ஒற்றைத் தீர்மானத்தை எடுத்து, அதன்படி வழக்கை அணுக வைக்கும் தலைமைத்துவத் தகுதி – லாயக்கு – அற்ற மாவை இன்னும் இது போன்ற எத்தனை திருவிழாக்களுக்கு அனுமதித்துப் பார்த்திருக்கப் போகின்றாரோ, ஆண்டவனுக்குதான் வெளிச்சம்....!

சுமந்திரன் சொன்னமை போல சிறிதரன் காலந்தாமதிக்காது – இழுத்தடிக்காது – தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தால் – ஏதோ ஒரு திசையில் கட்சி வேகமாக நகர்ந்திருக்கும்...!

நீதிமன்றத்தில் நேற்று சுவையான – வெளியே தெரியாத – சில விடயங்கள் நடந்தேறின. விவரிப்பது விரிசலைக் கூட்டும். அதனால் விட்டு விடுகிறேன்.

## சஜித் - சம்பந்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்துவதற்கு உங்களுக்கு விருப்பமா என்று வினவியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ.

இந்தத் தகவலை தெற்கு ஊடகம் ஒன்று பிரதான செய்தியாக வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

நாடாளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பஸில் ராஜபக்ஷ உள்ளார். ஏனைய கட்சிகள் அது தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் உள்ளன என்று அறிவதற்கு அவருக்கு விருப்பம்.

முதலில் ஐக்கிய மக்கள் சக்திக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தூது அனுப்பி நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு உங்களுக்கு விருப்பமா என்று பஸில் வினவியுள்ளார்.

எனினும், எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்று தூது கொண்டு வந்தவரிடம் சஜித் மற்றும் சம்பந்தன் தரப்பினர் செய்தி அனுப்பியுள்ளனர்.

– இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த, கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வெற்றியடைவார் என்று நம்பிக்கை வெளியிட்ட கிரியெல்ல எம்.பி., சஜித்தின் ஆட்சியில் அரசியல் தீர்வு காணப்படும் என்றும் உறுதியளித்தார்.

சஜித் பிரேமதாஸ எப்போதும் மக்கள் பக்கமே நிற்பார் என்றும், அவர் எந்த அரசியல் தலைவருடன் பகிரங்க விவாதத்துக்குத் தயாராக இருக்கின்றார் என்றும் கிரியெல்ல எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

## விஜயதாஸ, துஷ்மந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வகையில் கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் வித்தான நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க, மஹிந்த அமரவீர ஆகியோர் தாக்கல் செய்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி மே 08 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பிரதிவாதிகள் அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது எனவும், கட்சியின் யாப்புக்கு முரணாக அமைந்துள்ளது எனவும் முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக்க ஜயசுந்தர நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் அல்லர் எனவும், வேறு ஒரு கட்சியின் உறுப்பினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவி வகிப்பது கட்சி யாப்புக்கு முரணானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தப் பதவிகளுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், அந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டம் சட்டவிரோதமாக நடத்தப்பட்டுள்ளது எனவும் சட்டத்தரணி சந்தக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இதற்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால, பதில் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவையும் அறிவித்தலையும் பிறப்பித்த பிரதம மாவட்ட நீதிபதி எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.




# கோட்டாபயவை நாட்டைவிட்டு விரட்ட சிறுபான்மை மக்கள் திட்டமிடவில்லை

## கபீர் ஹாசிம் எம்.பி. சபையில் தெரிவிப்பு



"தன்னை தமிழ், முஸ்லிம் மக்களே விரட்டியடித்தார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது. ஆனால் அவர் நாட்டைவிட்டு தப்பிச்சென்றபோது முஸ்லிம் நாடே அவருக்கு தஞ்சம் வழங்கியதை அவர் மறந்துள்ளார்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டாபய ராஜபக்ஷ தான் எழுதிய புத்தகத்தில் முஸ்லிம்கள், தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினத்தவர்களே தன்னை விரட்டியடித்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் வரலாற்றை தெரிந்துகொள்ள வேண்டும். சிங்கள மன்னர்கள் காலத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் மன்னர்களை காட்டிக்கொடுக்கும் வகையில் நடந்துகொண்டதில்லை. இதனை சிறுபான்மை மக்களின் சூழ்ச்சியென்றே கூறுகின்றார். இவை கோட்டாபய தனது பாவத்தை கழுவிக் கொள்வதற்காகக் கூறும் பொய்யாகும். சிறுபான்மை மக்களால் அவரை விரட்டியடிக்க முடியுமா?

2019 ஜனாதிபதி தேர்தல் மேடையில் நாட்டை தன்னாலேயே மீட்க முடியும் என்றும், சிறுபான்மை மக்களுக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு இனவாதத்தை பரப்பியே அவர் ஆட்சிக்கு வந்தார். ஆனால் இறுதியில் அவரின் பாதுகாப்பைகூட அவரால் உறுதிப்படுத்த முடியாமல் போனது. சிங்கள மக்களின் வயிற்றிலும் அவர் அடித்தார். இதனைத் தொடர்ந்தே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எரிபொருள், எரிவாயு பிரச்சினைகளால் மக்கள் போராட்டம் நடத்தினர். அதில் சிறுபான்மை மக்களும் கலந்துகொண்டார்கள். ஆனால் அவரை சிறுபான்மை மக்கள் மட்டும் விரட்டியடிக்கவில்லை.

ஆனால் அவரின் புத்தகத்தில் சிறுபான்மை மக்களே அவரை விரட்ட நடவடிக்கை எடுத்தார் என்ற அவரின் கூற்று மிகவும் வெறுக்கத்தக்கதாகும். அவர் ஆட்சியில் இருக்கும்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு செயற்பட்டார். குறிப்பாக கொவிட் தொற்றுக்குள்ளான முஸ்லிம்களின் சடலங்களை எரிக்கும்போது, அதனை செய்ய வேண்டாம் என உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட அனைத்து நாடுகளும் கேட்டுக்கொண்டபோதும் அதனை கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் அரசாங்கமும் கண்டுகொள்ளவில்லை.

அதனால் கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை விட்டு செல்வதற்கு முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் திட்டமிடவில்லை. மாறாக இலங்கையர்கள் என்றவகையில் தனிப்பட்ட ரீதியில் அந்த போராட்டத்தில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். ஆனால் கோட்டாபயவுக்கு ஏற்பட்டது இறைவனின் சாபம் என்ற நான் நினைக்கிறேன்.

சடலங்களை எரித்து முஸ்லிம் மக்களின் உள்ளங்களைப் புண்படுத்தினார். முஸ்லிம் மக்களுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டபோதும் இறுதியில் அவருக்கு தஞ்சம் வழங்க எந்த பௌத்த நாடும் முன்வரவில்லை. மாலைதீவே அவருக்கும் தஞ்வம் கொடுத்தது. அதன் பின்னர் அங்கிருந்து சவூதி விமான சேவை ஊடாகவே சிங்கப்பூருக்கு சென்றார். அப்போது முஸ்லிம்கள் யாரும் அவருக்கு எதிராகச் செயற்படவில்லை.

எனவே, அதிகாரத்தை பெற்றுக் கொள்ளவே கோட்டாபய ராஜபக்ஷ சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலையும் அதற்காக பயன்படுத்திக் கொண்டார். ஆனால் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதனால் கோட்டாபய ராஜபக்ஷ தனது புத்தகத்தில் எழுதியிருக்கும் பிழையான கருத்துக்களை திருத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் இது வரலாற்றில் பதிவாகும்."– என்றார்.

# பால்மா விலை குறைப்பு



இன்று முதல் அமுலாகும் வகையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 1 கிலோ கிராம் எடையுடைய பால்மா பொதி ஒன்றின் விலையை 250 ரூபாவினால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 400 கிராம் எடையுடைய பால்மா பொதி ஒன்றின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாவை என்னும் பாவை

அரசியல் கட்சி ஒன்றில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, அதை வழிநடத்துவது என்பது அற்ப விவகாரம் அல்ல. மிகுந்த பொறுப்புடையசெயல். அதுவும்செயற்பாட்டுத் தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு கட்சியில் பதவியைப் பொறுப்பேற்று வழி நடத்துவது என்பது பெரிய கடமை. சுமை. பொறுப்பு.

அதை விட்டேத்தியாகச் செய்ய முடியாது. உதாசீனத்துடன் கையாள முடியாது. பொறுப்பற்று இயக்க முடியாது.

இலங்கையில் அரசியல் கட்சி என்பது சட்ட உரித்து அல்லது ஆளுமை கொண்ட ஓர் கட்டமைப்பு அல்ல. அது சட்ட ரீதியாகக் கூட்டிணைக்கப்படாத ஓர் அமைப்பு.

அத்தகைய அமைப்பை வழி நடத்துவதில் எவ்வளவு அவதானம் தேவை என்பதை இப்போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திடம் இலங்கையின் பழமையான கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா சுதந்திரக் கட்சி படிக்கும் பாடத்திலிருந்து ஏனையோர் உய்த்துணர வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒருவருக்கு - அக்கட்சியின் தவிசாளராக கடந்த 9 ஆண்டுகளாக கட்சியை வழிநடத்தி வந்தவருக்கு - கட்சிப் பக்கம் தலை வைக்க இடம் அளிக்காமல் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் முதலில் இடைக்கால தடை விதித்து, பின்னர் 14 நாள்களுக்கு ஒரு தடவை அந்தத் தடை உத்தரவை நீடித்தது.

இப்போது இன்னொரு மனுவின் மீது, அந்த வழக்கு விசாரணை முடியும் வரை தவிசாளர் பதவியில் தொடர்வதற்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவரது இடத்துக்கு பதில் தவிசாளர் நியமனம் பெற்றவர் என்று அறிவிக்கப்பட்ட - நாட்டின் நீதி அமைச்சராக இருப்பவரையே - அந்தப் பதில் தவிசாளர் பதவியில் நீடிக்க இடைக்காலத் தடை விதித்துள்ளது நீதிமன்றம். அது மட்டுமல்ல, கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கும் அதே போன்று தடை உத்தரவு வந்துள்ளது.

இந்தத் தடை உத்தரவுகளை எல்லாம் முறையான நீதி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றம் நீக்குமா, விலக்குமா அல்லது நீடிக்குமா என்பவற்றை எல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் இந்தப் பட்டறிவு தமிழ் கட்சிகளுக்கும் நல்ல பாடம்.

தாம் தலைவராக பதவியேற்று பத்து வருடங்கள் தாண்டும் நிலையில் இடையில் ஒரேயொரு தேசிய மாநாட்டை மட்டுமே கூட்டி இருக்கின்றார் தமிழர்களின் முக்கிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா.

சுதந்திரக் கட்சியில் நேற்று வரைத் தலைமைத்துவப் பதவியில் இருந்தபடி நீதிமன்றத்திடம் குட்டு வாங்கியிருக்கும் மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டில்தான் கட்சியின் தலைவராக வந்து, இப்போது அதைத் தற்காலிகமாக இழந்து நிற்கின்றார். கட்சியையும் நீதிமன்றத்திலும் வெளியிலும் அல்லாட வைத்திருக்கின்றார்.

அவருக்கு ஓராண்டுக்கு முன்னர் 2014 இல் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை பொறுப்பேற்ற மாவை சேனாதிராஜாவும் கடைசியில் கட்சியை அத்தகைய ஒரு நிலையில்தான் கொண்டு போய் நிறுத்தி இருக்கின்றார்.

ஆனால் சுதந்திரக் கட்சி இன்று நீதிமன்றத்தில் படும் அவலத்துடன் ஒப்பிடுகையில் தமிழரசின் நிலைமை எவ்வளவோ மேல் என்று கூறலாம்.

தமிழரசைப் பொறுத்தவரை அதன் தேசிய மாநாடும், புதிய உத்தியோகத்தர்கள் பதவியேற்பும்தான் தடைப்பட்டு நிற்கின்றன. ஆனால் சுதந்திரக் கட்சியோ அதன் கட்சிக் கட்டமைப்பே சீர்குலைத்து நிற்கும் அவலத்தைச் சந்தித்து நிற்கின்றது.

பத்து வருடங்களாகக் கட்சியின் தலைமைபதவியில்இருந்தபடி, இடையில் ஒரேயொரு தேசிய மாநாட்டை மட்டும் கூட்டிய மாவை, கட்சி இத்தகைய நெருக்கடிக்குள் விழுந்த பின்னரும் கூட திருந்தவில்லை. தன்னைத் திருத்தவில்லை.

கட்சியின்கொள்கைவகுப்புத்தீர்மானங்களை எடுக்கும் தகுதி கொண்டது கட்சியின் மத்திய குழு. கட்சியின் அடுத்த தேசிய மாநாடு முடிவடையும் வரை மத்திய குழு பதவியில் இருக்கும் என்கிறது கட்சி யாப்பு.

கட்சி தொடர்பில் வழக்குத் தாக்கலாகி, இரண்டு மாதங்கள் கடந்தும் கூட, சுமார் 50 உறுப்பினர்களைக் கொண்ட அந்த மத்திய குழுவை மாவை சேனாதிராஜா கூட்டவே இல்லை. கூட்டி இருந்தால் நேற்று கட்சி நீதிமன்றத்தில் மூன்று வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுக்கும் அவல நிலைமை வந்திருக்காது.

மாவை தலைவராக நடக்கவில்லை. மாவை வெறும் பாவையோ என்று சந்தேகப்படும்படியாகத்தான் செயலிழந்து நிற்கிறார்.

# காங்கிரஸின் உள்நோக்கங்கள் ஒவ்வொன்றாக வெளிவருகின்றன

## பிரதமர் நரேந்திர மோடி தெரிவிப்பு

"காங்கிரஸின் ஆபத்தான உள்நோக்கங்கள் ஒவ்வொன்றாக வெளிவருகின்றன" என்று பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

சத்தீஸ்கரில் உள்ள சர்குஜா மாவட்டத்தின் தலைமையகமான அம்பிகாபூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசிய நரேந்திர மோடி,

"காங்கிரஸின் ஆபத்தான உள்நோக்கங்கள் ஒவ்வொன்றாக வெளிவருகின்றன. இப்போது அது பரம்பரை சொத்துக்களுக்கு வரி விதிக்கப்படும் என்று சொல்கிறது. முன்பு ராகுலின் தந்தைக்கும், தற்போது ராகுலுக்கும் ஆலோசகராக இருக்கும் சாம் பிட்ரோடா, நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் கடினமாக உழைத்து சம்பாதிப்பவர்கள் மீது அதிக வரி திணிக்கப்பட வேண்டும் என்று கூறி இருக்கிறார்.

இதை அவர் (சாம் பிட்ரோடா) பகிரங்கமாக கூறினார். இப்போது அவர்கள் (காங்கிரஸ்) ஒரு படி மேலே சென்று பரம்பரை சொத்துக்களுக்கு வரி விதிக்கப் போகிறோம் என்கிறார்கள். அப்படியானால், பெற்றோரிடமிருந்து அவர்களின் வாரிசுகள் பெறும் சொத்துக்களுக்கு வரி விதிக்கப்படும். அப்படியானால், "கை" (காங்கிரஸ் தேர்தல் சின்னம்) உங்கள் பிள்ளைகளிடம் இருந்து சொத்துகளை பறித்துவிடும்.



நீங்கள் உயிருடன் இருக்கும் வரை, காங்கிரஸ் அதிக வரி விதிக்கும். உங்கள் ஆயுள் முடிந்த பிறகு, அது உங்கள் மீது பரம்பரை சொத்து வரியைச் சுமத்தும். அவர்கள் (காங்கிரஸ்) உங்கள் சொத்துகளையும் உங்கள் குழந்தைகளின் உரிமைகளையும் பறிக்க விரும்புகிறார்கள். சாமானிய இந்தியர்கள் தங்கள் சொத்துகளை தங்கள் குழந்தைகளுக்கு கொடுப்பதை காங்கிரஸ் விரும்பவில்லை." – என்றார்.

# சாதிவாரி கணக்கெடுப்பை எவராலும் தடுக்க முடியாது

## ராகுல் காந்தி தெரிவிப்பு

"எந்த சக்தியாலும் சாதிவாரி கணக்கெடுப்பை தடுக்க முடியாது. காங்கிரஸ் தேர்தல் அறிக்கை புரட்சிகரமானது."

– இவ்வாறு காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

டில்லியில் காங்கிரஸ் கட்சி நடத்திய சமூக நீதி மாநாட்டில் பேசிய ராகுல் காந்தி,

"காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். 70 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு எடுக்கும் மிக முக்கிய நடவடிக்கையாக இது இருக்கும்.

இந்த கணக்கெடுப்பின் மூலம் நாட்டின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொண்டு, அடுத்து நாடு எந்த திசையில் பயணிக்க வேண்டும் என்பதை மதிப்பீடு செய்ய முடியும். எனவே, சாதிவாரி கணக்கெடுப்பை நாங்கள் அமல்படுத்துவோம்.

ஊடகங்கள், நீதித்துறை, தனியார் மருத்துவமனைகள், பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றில் ஓ.பி.சி, பட்டியலின மற்றும் பழங்குடியினர் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர். எனக்கு சாதிகளில் ஆர்வம் இல்லை. ஆனால், நியாயத்தில் ஆர்வம் உள்ளது. இன்று 90 சதவீத இந்திய மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அநீதியைப் பற்றிப் பேசும்போதெல்லாம், நாட்டை பிளவுபடுத்தும் முயற்சி இது என எதிர்க்கிறார்கள். தேசபக்தர்கள் என தங்களைக் கூறிக் கொள்பவர்கள், சாதிவார் கணக்கெடுப்பு எனும் எக்ஸ்-ரேக்கு பயப்படுகிறார்கள்.

பிரதமர் மோடி எல்லோரிடமும் தான் ஓ.பி.சி. என்று கூறிக் கொள்கிறார். நான் சாதிவாரி கணக்கெடுப்பைப் பற்றி பேச




ஆரம்பித்தபோது, சாதி என்பதே இல்லை பணக்காரர், ஏழைகள் என இரண்டே சாதிகள் மட்டும்தான் இருக்கின்றன என்று சொன்னார்.

சாதிவாரி கணக்கெடுப்பை எடுத்தால், நாட்டில் உள்ள ஏழைகள் ஓ.பி.சி, பட்டியலின மற்றும் பழங்குடியன மக்களாகத்தான் இருப்பார்கள். சாதிவாரி கணக்கெடுப்பு என்பது எனது அரசியல் அல்ல, என் வாழ்க்கையின் நோக்கம். நான் உறுதியளிக்கிறேன். எந்த சக்தியாலும் சாதிவாரி கணக்கெடுப்பை தடுக்க முடியாது. அப்படி மேலும் மேலும் தடுக்கப்பட்டால், அது இன்னும் பெரிய சக்தியாகவே திரும்ப வரும். ஏனெனில், 90 சதவீத மக்களுக்கு நியாயம் கிடைத்தே தீர வேண்டும்." – என்றார்.

# மோடி ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு எதுவுமில்லை; ஓ.பன்னீர்செல்வம்

பிரதமர் மோடி ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு எதுவுமில்லை என ஓ.பன்னீர்செல்வம் கருத்து தெரிவித்துள்ளார்.

மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நேற்று முன்தினம் சுவாமி தரிசனம் செய்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மக்களவைத் தேர்தலில் எனது வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

தேர்தல் ஆணைய அதிகாரிகள் அறிவிக்கும் வாக்குப்பதிவு சதவீதத்தில் எப்போதும் வித்தியாசம் வரத்தான் செய்யும். அ.தி.மு.கவை மீட்பது குறித்து கேட்கிறீர்கள். பொறுத்திருந்து பாருங்கள். அது நடக்கும். பிரதமர் மோடி 10 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சி நடத்தியுள்ளார். அவரது ஆட்சியில் எங்கும் சிறுபான்மை மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை."
– என்றார்.

# அண்டனி பிளிங்கன் சீனாவுக்கு விஜயம்





அமெரிக்க வெளியுறவு செயலாளர் அண்டனி பிளிங்கன் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

அவர் நேற்று ஷங்காய் நகரைச் சென்றடைந்துள்ளார் எனவும் இன்று பீஜிங்கில் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், அவரது இந்த விஜயம் அமைந்துள்ளது.

உக்ரைன், இஸ்ரேல் மற்றும் தாய்வான் உள்ளிட்ட நாடுகளுக்கு, 95 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க செனட் சபை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

அத்துடன், டிக்டொக் செயலியை தடை செய்வதற்கான சட்டமூலத்தையும் அமெரிக்கா நிறைவேற்றியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் அமெரிக்க வெளியுறவு செயலாளர் அண்டனி பிளிங்கன், சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

# உக்ரைனின் புலனாய்வு நடவடிக்கையில் ரஷ்ய பிரதி பாதுகாப்பு அமைச்சர் கைது



உக்ரைனின் புலனாய்வு நடவடிக்கைகள் காரணமாக, ரஷ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார்.

அவர் 15 வருடங்களுக்கு சிறைத்தண்டனையை எதிர்கொள்வார் என உக்ரைனின் கிவ் போஸ்ட் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் உக்ரைனிய பாதுகாப்புப் புலனாய்வுத் துறை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சரின் சொந்த ஆவணங்கள் உட்பட, பல ரஷ்ய தகவல்களை கடந்த மார்ச் மாதத்தில் கைப்பற்றியது.

எவ்வாறாயினும், இரகசிய தகவல்களின் கசிவு மற்றும் உக்ரைனிய நடவடிக்கையால் பெறப்பட்ட தகவல்கள் காரணமாக ரஷ்யாவின் பாதுகாப்புத் தரப்பில் பல சிக்கல்கள் காணப்பட்டன என்று ரஷ்ய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# டிக்டொக் செயலியை தடை செய்யும் சட்டம் அமெ. நாடாளுமன்ற மேலவை நிறைவேற்றம்




டிக்டொக் செயலியை தடை செய்வதற்கான சட்டத்தை அமெரிக்காவின் நாடாளுமன்ற மேலவை நிறைவேற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

டிக்டொக் செயலியின் தாய் நிறுவனமாக சீனாவின் பைட்டான்ஸ் நிறுவனம் ஒன்பது மாதங்களுக்குள் டிக்டொக்கின் அமெரிக்க பங்குகளை விற்காவிட்டால் அதை தடை செய்ய இச்சட்டம் வழிவகை செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

டிக்டொக் செயலி தன்னுடைய பயனாளர்களின் பெரும்பாலான தகவல்களைச் சீனாவிடம் கொடுக்கிறது என அமெரிக்காவில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் இந்த நிறுவனம் பயனாளர்களின் அனுமதியின்றி இரகசியமாகத் தகவல்களை எடுப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் பைட்டான்ஸ் என்ற சீன நிறுவனத்தைத் தாய் நிறுவனமாகக் கொண்ட டிக்டொக், அமெரிக்காவில் நிறையப் பயனாளர்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதங்களுக்காக 13 கோடி 20 லட்சம் ரூபா வரை செலவு

## 'மௌபிம' சிங்கள நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தில் தகவல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதங்கள் பயனற்றவை என்றும் அதிகமான செலவுகளை ஏற்படுத்துகின்றன எனவும் கொழும்பில் இருந்து வெளிவரும் 'மௌபிம'என்ற சிங்கள நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடங்களில் இத்தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட விவாதங்களுக்கு 13 கோடியே 20 லட்சம் ரூபா வரை செலவாகியுள்ளதாகவும் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியர் தலையங்கத்தின் சில பகுதிகள் பின்வருமாறு :-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை 11 தடவைகள் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விவாதங்களை நடத்துவதற்காக 13 கோடியே 20 லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பாரியளவிலான நிதியை செலவு செய்து நாடாளுமன்றத்தில் வாத விவாதங்கள் நடாத்தப்படுவதால் இந்த பிரச்சினைக்கு கிடைத்த தீர்வு என்ன என்ற கேள்வி எழுகிறது.

குறைந்தபட்சம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நீதி நிலைநாட்டப்படுமானால் இத்தனை பிரயத்தனத்திற்கும் பலன் கிட்டியதாக நிம்மதியடைய முடியும்.

அவ்வாறு அன்றி விவாதங்களால் தொடர்ந்தும்என்னநடக்கப்போகின்றது? பிரச்சினைகள் தொடர்பான வாத-விவாதங்களினால் மாத்திரம் நாட்டை ஒருபோதும் ஒரு நிலைக்கு கொண்டுவர முடியாது.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாத-விவாதங்கள் தொடர்பான ஹன்சாட் அறிக்கைகளை புரட்டிப் பார்த்தால் இந்த விடயத்தை உணர்ந்துகொள்ள முடியும்.

ஆகவே, எந்தவொரு விடயம் தொடர்பிலும் வாத-விவாதங்கள் நடத்தப்படுவது தவறான விடயம் அல்ல, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்கின்ற போதிலும், அது எந்தளவு ஆக்கபூர்வமானதாக அமைகின்றது என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.- என அந்த ஆசிரியர் தலையங்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.





# சர்வதேச அரங்கத்தில் இலங்கையின் பாற்சோறு

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த சாவிந்திரி பெரேரா என்பவர் சமையல் போட்டியான மாஸ்டர்செஃப் ஆஸ்திரேலியாவில் இலங்கையின் பாரம்பரிய உணவான பாற்சோறை சமைத்து பாராட்டுப் பெற்றுள்ளார்.

இலங்கையின் பாரம்பரிய காலை உணவான பாற்சோற்றின் விளக்கம் மற்றும் அதன் சுவைக்காக அவர் நடுவர்களால் பாராட்டப்பட்டுள்ளார்.

இதேவேளை, நடுவர்களில் ஒருவர் பாற்சோற்றை ஓர் ஓவியம் போன்றது என்று கூறியுள்ளார்.

'சவ்' என்று அன்புடன் அழைக்கப்படும் சாவிந்திரி பெரேரா, பாற்சோறு மற்றும் இலங்கைக் கருப்பட்டி சேர்க்கப்பட்ட தேங்காய் துருவல் ஆகியவற்றை சமைத்துள்ளார்.

அவரது உணவை 'ஒரு கொண்டாட்டத்திற்கு' ஒப்பிட்ட நடுவர்கள், சிறப்பான முறையில் பாற்சோறை வழங்கியமைக்காக அவரைப் பாராட்டியுள்ளனர்.



# நாடாளுமன்ற உறுப்பினராக என்.ஜி.வீரசேன பதவியேற்பு

என்.ஜி.வீரசேன கமகே நாடாளு மன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

நேற்றுக் காலை நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட வேளை யில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.நந்தசேனவின் மறை வையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்காக என்.ஜி.வீரசேன கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

# 2 ஆவது தடவையாக பேச்சுக்கு வராத முதலாளிமார் சம்மேளன பிரதிநிதிகள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் தொடர்பாக கலந்து ரையாட நேற்று ஏற்பாடு செய்யப்பட் டிருந்த சம்பள நிர்ணய சபையின் இரண்டாவது பேச்சுவார்த்தை கோரமின் மையால் நடைபெறவில்லை.

நேற்றைய பேச்சுவார்த்தையிலும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதி நிதிகள் கலந்து கொண்டிருக்க வில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக் கான நாளாந்த சம்பளத்தை தீர்மா னிப்பதற்கான சம்பள நிர்ணய சபை யின் இரண்டாவது பேச்சுவார்த்தை கொழும்பில் உள்ள தொழில் திணைக் களத்தில் நேற்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இதில் பங்கேற்பதற்காக 9 தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும், அர சாங்க பெருந்தோட்ட யாக்கத்தின் பிரதி நிதியும், தொழில் ஆணையாளரும் கலந்துகொண்டிருந்த போதிலும் பிர தான பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டி ருக்கவில்லை.

எனவே இந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு போதிய கோரம் இன்மையினால் நேற் றைய பேச்சுவார்த்தை நடைபெற வில்லையென தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

கடந்த 10 ஆம் திகதி முதலாவது சம்பள நிர்ணய சபைக் கூட்டம் நடை பெற்ற சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த் தைக்கு முதலாளிமார் சம்மேளத்தின் பிரதிநிதிகள் வருகை தராமையினால், 14 நாள்களுக்கு பின்னர் நேற்று இரண்டாவது முறையாக சம்பள நிர் ணய சபை கூடும் என அறிவிக்கப்பட்டி ருந்தது.

இந்நிலையில், தற்போதைய சூழ் நிலையில் பெருந்தோட்டத் தொழிலா ளருக்கு 1,700 ரூபா அடிப்படை சம்பளம் வழங்க முடியாது என பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

1,000 ரூபா அடிப்படை சம்பளத்து டன் மேலதிக கொடுப்பனவுகளையே வழங்க முடியும் என ஜனாதிபதியும் பகிரங்கமாக கூறியுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் உள்ள மையினால், சம்பள நிர்ணய சபை பேச்சுவார்த்தைகளில் தங்களால் கலந்துகொள்ள முடியாது எனவும் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள் ளார்.

தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கினால், வருடமொன்றுக்கு 35 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவிட வேண்டியுள்ள தாகவும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அதனை மேற்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

எனவே, உற்பத்திற்கு ஏற்றவாறு சம்பளத்தை அதிகரித்து வழங்கும் இரண்டு திட்டங்களை தாம் முன்வைத்துள்ளனர் எனவும், அதனை நடைமுறைப்படுத்தினால் உற்பத்தி அதிகரிப்பதுடன், தொழிலாளர்களுக்கு அதிக சம்பளத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பெருந்தோட்ட நிறுவ னங்கள் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# வவுனியாப் பொலிஸாரால் நகரில் நேற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

(கே.வசந்தன்)

வவுனியாப் பொலிஸாரால் நேற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. வவுனியாவில் அதிக எண்ணிக் கையான மக்கள் வந்து செல்லும் புதிய பஸ் நிலையப் பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாய பொலிஸ் குழுவால் இந்தச் செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சமுதாய பொலிஸ் குழுவினரும் இதில் கலந்து கொண்டு டெங்கு கட்டுபாட்டு நடவடிக்கைளில் ஈடுபட்டனர். இதில் புதிய பஸ் நிலையம், கண்டி வீதியோரம் என்பவற்றில வீசப்பட்டிருந்த போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பன அகற்றப்பட்டன. நீர் வடிகால்களும் சுத்தம் செய்யப்பட்டன.











# தியத்தலாவை ஓட்டப் பந்தய விபத்தில் காயமடைந்த ஏழு பேர் வீடு திரும்பினர்

தியத்தலாவை ஓட்டப் பந்தய திடல் விபத்தில் காயமடைந்து, வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த 7 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மேலும் 11 பேர் பதுளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

கடும் காயங்களுக்குள்ளான இருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே, தியத்தலாவை – ஃபொக்ஸ் ஹில் வாகன விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத்தினரால் 7 பேர் அடங்கிய குழு நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்றமைக்கான காரணம், பொறுப்புக்கூற வேண்டியவர்கள், பார்வையிடுவதற்காக வருகை தந்தவர்களுக்கான பாதுகாப்பு உரிய முறையில் வழங்கப்பட்டதா போன்ற விடயங்கள் தொடர்பில் இந்தக் குழு ஆராயவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தியத்தலாவ விபத்து தொடர்பான அறிக்கை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்படும் என இராணுவ ஊடகப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி தியத்தலாவையில் இடம்பெற்ற ஃபொக்ஸ் ஹில் கார் பந்தயத்தின் போது நேர்ந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

# விவாதத்திற்குத் திகதி ஒதுக்க நாடாளுமன்றில் சந்திக்கலாம்!

## ஐக்கிய மக்கள் சக்தியால் தேசிய மக்கள் சக்திக்குக் கடிதம்

සමගි ජන බලවේගය

ஐக்கிய மக்கள் சக்தி • Samagi Jana Balawegaya

தலைவர்கள், பொருளாதார குழுக்களுக்கு இடையிலான விவாதத்திற்கான திகதியை ஒதுக்குவதற்காக இன்று அல்லது நாளை நாடாளுமன்றத்திற்கு வருகை தருமாறு ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்திக்கு அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான நளின் பண்டார, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸவிற்கு கடிதமொன்றை அனுப்பி இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலும், இரு கட்சிகளின் பொருளாதாரக் குழுக்களுக்கு இடையிலும் இடம்பெறவுள்ள விவாதத்திற்கான திகதியை ஒதுக்குவதற்காக இன்று அல்லது நாளை நாடாளுமன்றத்திற்கு வருகை தருமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி தன்னால் அனுப்பப்பட்ட கடிதத்தில் முதலில் பொருளாதார குழுக்களுக்கு இடையிலும் அதன்பின்னரே தலைவர்களுக்கு இடையிலும் விவாதத்தை நடத்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்ததாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, விவாதத்தை எதிர்வரும் மே மாதத்தில் நடத்துவது தொடர்பில் இருதரப்பினருக்கு இடையே இதன் போது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# வல்வையில் இந்திர விழா

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்பாணம் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கொடியிறக்க திருவிழாவான இந்திரவிழா உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மிகசிறப்பாக இடம்பெற்றது.

இதில் முத்துமாரியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களை பழமையான கார்களில் வீதி உலா எடுத்துவரப்பட்டனர்.

இதில் முக்கிய வீதிகள் வர்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, கலைநிகழ்ச்சிகள், நடன ஆற்றுக்கைகள், கவியரங்கங்கள், சொற்பொழிவுகள், புகைக் குண்டு ஏற்றல், வாண வேடிக்கைகள் இடம்பெற்றன. இந்திரவிழாவில் 81 ஆண்டுகளாக புகைக்குண்டு ஏற்றும் வழக்கம் காணப்படுவதை பறைசாற்றும் முகமாக 81அடியில் இராட்சதப் புகைக் குண்டு ஏற்றப்பட்டமை சிறப்பம்சமாகும்.
















# வவுனியா அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வவுனியா செயலகத்தின் முன் ஆர்பாட்டம்!

(கே.வசந்தன்)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைகள் சங்கத் தினர் தங்களுக்குப் போக்குவரத்துக் கொடுப்பனவை வழங்கக் கோரி வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் –

வவுனியா மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாங்கள் பொருளாதார இக்கட்டான காலகட்டத்தில் போக்குவரத்து கொடுப்பனவுகள் இன்றி நீண்ட தூரத்திற்கு சென்று வேலை செய்கின்றோம்.

எனவே எமது இக்கட்டான நிலமையைக் கருத்தில் கொண்டு 7,500 ரூபா போக்குவரத்து கொடுப்பனவை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் வெளிக்களத்தில் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு எங்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தனர்.

தங்கள் கோரிக்கையை ஜனாதிபதி மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோர் கருத்தில் எடுக்க வேண்டும் என்றும் அவர்களால் கோரப்பட்டது.











# படகு இயந்திரத்தின் காற்றாடியில் சிக்கி இளம் குடும்பஸ்தர் மரணம்!

## மன்னார் முத்தரிப்புத்துறையில் சம்பவம்



மன்னார் முத்தரிப்புத்துரையில் கடற்றொழிலுக்குச் சென்றவேளை கடலில் வைத்து படகு இயந்திரத்தின் காற்றாடி வெட்டியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது

இந்த சம்பவமானது நேற்றுக் காலையில் நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான தேவராஜா பீரிஸ் என்று தெரிய வருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது சிலாவத்துறை மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது



# சட்டவிரோத வலைகளுடன் கற்பிட்டியில் ஒருவர் கைது!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டியில் கொண்டுவரப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சட்டவிரோதமாக தங்குஸ் வலைகள் அடங்கிய 55 பொதிகளை கற்பிட்டிப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் சுற்றி வளைப்பில் கைப்பற்றினர். அதனுடன் தொடர்பானவர் என்ற சந்தேகத்தின் பெயரில் மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.டப்யூ.எஸ் எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினரான வன்னி நாயக்க(80413), பஸ்நாயக்க (100716) ஆகியோர், கற்பிட்டி கடற்படை முகாம் லெப்டினன் டபிள்யூ.டி.எம்.பி வன்னி நாயக்க, அதிகாரி டபிள்யூ.ஈ.ஜீ.என். என் கருணாசேன மற்றும் கற்பிட்டி கடற்றொழில் பரிசோதகர் டி.ஆர்.யி.என் சமன் புஸ்பகுமார ஆகியோருடன் இணைந்து சுற்றிவளைப்பை மேற் கொண்டனர்.

அதில், கற்பிட்டியைச் சேர்ந்தவருக்கு சொந்தமான களஞ்சியசாலை அறை ஒன்றை வாடகைக்கு பெற்று அதில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 1870 கிலோ எடை கொண்ட தடை செய்யப்பட்ட தங்குஸ் வலைகள் அடங்கிய 55 பொதிகள் கைப்பற்றப்பட்டன. அங்கு தங்கி இருந்த மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். புத்தளம் கடற்றொழில் காரியாலய பொறுப்பதிகாரியின் அறிக்கை பெறப்பட்டு, கைது செய்யப்பட்டவர் அந்த வலைகளுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.



# இன்றைய ராசி பலன்கள் - 25.04.2024




தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். இன்று வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கான பாராட்டு கிடைக்கும். இது உங்கள் மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்க உதவும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். முக்கிய முதலீடுகளில் இன்று பணத்தை சேமிக்கலாம்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். தைரியம் மற்றும் உறுதி வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

நீங்கள் இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன் படுத்திக்கொள்ளுங்கள்.




இன்று பதற்றமும் கவலையும் காணப்படும். உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப் படலாம். சிறப்பாக திட்டமிட்டு மிகச் சரியாக பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்களின் சில கருத்துக்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள இன்றைய நாள் உகந்ததல்ல. உரையாடும் போது கவனம் தேவை.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. என்றாலும் அதிகமாக சேமிக்க இயலாது.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப் படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள்நேரா வண்ணம் கவனித்து செயலாற்ற வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் இறக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் துல்லியமாக முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு வன்மையாக நடந்து கொள்வீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணம் அதிக அளவில் செலவாகும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும். கார மற்றும் எண்ணெய் உணவுகளை தவிர்க்க வேண்டும். அதிக நீரைப் பருக வேண்டும்.




இன்று ஓய்வில்லாமல் உழைப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று பயனுள்ள முக்கிய முடிவு களை எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப் படும். இது உங்களுக்கு புதிய வாய்ப் புகளை உருவாக்கித் தரும்.

வெளியிடங்களுக்கு சென்று இருவரும் இணைந்து மகிழ்ச்சியுடன்இன்றையநாளைகழிப்பீர்கள்.இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் எதிர்காலத்துக்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சம்பவங்கள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் செயல்களை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.முக்கிய மான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளி வைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும் காரணத்தால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று மிகுந்த எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் தேவை.

இன்று அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொண்டால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். எனவே தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது அவசியம். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். கண்களுக்கு போதிய கவனமும் சிகிச்சையும் மேற்கொள்வது நல்லது.




இன்று சில ஏமாற்றங்களை சந் திக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அடுத்தவர் தரும் வாக்குறுதியை நம்பாமல் உங்கள் கடின உழைப்பை நம்பி செயலாற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடச் சூழல் இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும்.

இன்று சில பண வரவுகள் காணப்பட்டாலும் செலவுகளை சமாளிப்பது கடினமாக இருக்கும். உங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவு செய்யவும். உடல் உழைப்பு காரணமாக கால்களில் வலி ஏற்படலாம்.




ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன்களை அளிக்கும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகளை சந்திக்க நேரும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.04.2024

## தனுசு

இன்று உறுதியாக நற்பலனகள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறக் காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

உங்களின் சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் இறக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் துல்லியமாக முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

## கும்பம்

உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.

## மகரம்

இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.

## மீனம்

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும். குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும் அவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.





